மாணவர் வழிகாட்டி

பட்டப் படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

அறிமுகம்:

இக் கல்லூரி ஸ்ரீ லங்கா அரசாங்கத்தின் சட்டப் பிரமாணங்களுக்கமையத் தாபிக்கப்பட்டு, பதிவு செய்யப் பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக் கழக வெளிநிலைப் பாட நெறிகளுக்கான விரிவுரை களைத் தமிழ்மொழி மூலம் யாழ்ப்பாணத்தில் நடாத்த உள்ளது. விரிவுரைகளைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆற்றுவர். இலங்கைப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப் பாட நெறிகளுக்கான விரிவுரைகளுக்குரிய ஆலோசனை களையும், விபரங்களையும் ரூபா 10/— செலுத்திப் பின்வரும் முகவரியிலிருந்து மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் மேற்படி முகவரியிலுள்ள தாபனம் மட்டுமே வெளிநிலைப் பாடநெறிகளுக்கான விரிவுரைகளைத் தமிழ்மொழிமூலம் நடாத்தப் பட்டப்படிப்புகள் கல்லூரி யால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இக்கையேடு இலங்கைப் பல்கலைக் கழகங்களின் வெளி நிலைப் பட்டப்படிப்புகளான (EXTERNAL DEGREES) கலைமாணி, வர்த்தகமாணி, விஞ்ஞானமாணி (புள்ளி விபரவியல்) ஆகிய பாட நெறிகளுக்குரிய முதற் தேர்வு களுக்கான விரிவுரைகளுக்கு மாணவர்கள் தம்மைப் பதிவு செய்வதற்கான தகைமைகளையும், பாடங்களையும், விரிவுரைக்குரிய கட்டணங்களையும் கொண்டுள்ளது.

— உதவிப் பதிவாளர்

பொருளடக்கம்

பக்கம்	4	பகுதி	I — கலைமாணி பட்டப் படிப்புகள்
	5	பகுதி	II — விஞ்ஞானமாணி பட்டப் படிப்புகள்
	6	பகுதி	III — வர்த்தகமாணி பட்டப் படிப்புகள்

அங்கீகரிக்கப்பட்ட பாடங்கள்

க. பொ. த. உயர்தரம் 1979க்கு முன் (பழைய பாடத்திட்டம்)

கணக்கியல்
விவசாயம்
பிரயோககணிதம்
அரபு
தாவரவியல்
பௌத்தம்
பௌத்தநாகரிகம்
இரசாயனம்
கிறிஸ்தவம் (Rc/NonRc)
வர்த்தகமும் நிதியும்
பொருளியல்
ஆங்கிலம்
ஒழுக்கவியல்
பிரெஞ்சு
புவியியல்
ஜேர்மன்
அரசியல்
கிரேக்கம்
கிரேக்க ரோம நாகரிகம்
ஹிந்தி
இந்துசமயம்
இந்து நாகரிகம்
வரலாறு
மனையியல்
இஸ்லாம்
இஸ்லாமிய நாகரிகம்
லத்தீன்
அளவையியல்
பாளி
பௌதிகவியல்
தூயகணிதம்
சமஸ்கிருதம்
சிங்களம்
தமிழ்
விலங்கியல்

க. பொ. த. உயர்தரம் 1979க்கு பின் (பழைய பாடத்திட்டம்)

கணக்கியல்
விவசாயம்
பிரயோக கணிதம்
அரபு
சித்திரம்
தாவரவியல்
பௌத்தம்
பௌத்த நாகரிகம்
இரசாயனம்
கிறீஸ்தவம் (Rc/Non Rc)
வர்த்தகமும் நிதியும்
இந்துசமயம்
சங்கீதம் (இந்துஸ்தான்)
பொருளியல
ஆங்கிலம்
ஒழுக்கவியல்
பிரெஞ்சு
புவியியல்
ஜேர்மன்
கிரேக்கம்
கிரேக்க ரோம நாகரிகம்
ஹிந்தி
இந்து நாகரிகம்
சங்கீதம் (மேலைத்தேசம்)

வரலாறு
மனையியல்
இஸ்லாம்
இஸ்லாமிய நாகரிகம்
லத்தீன்
அளவையியல்
சங்கீதம்
அரசியல் விஞ்ஞானம்
பாளி
பௌதிகம்
தூயகணிதம்
சமஸ்கிருதம்
சிங்களம்
தமிழ்
விலங்கியல்

க. பொ. த. உயர்தரம் 1979க்குப் பின்

(ஆகஸ்ட் புதிய / இடைக்கால பாடத்திட்டம்)

பௌதிகம்
இரசாயனம்
கணிதம் (மெக்கானிக்)
தாவரவியல்
விலங்கியல்
விவசாய விஞ்ஞானம்
புவியியல்
விவசாயம்
கணிதம்
தூயகணிதம்
பொருளியல்
அரசியல் மூலத் தத்துவங்கள்
சமூகவியல்
வரலாறு
அளவையியலும் விஞ்ஞான முறையும்
வர்த்தகமும் நிதியும்
கணக்கியல்
சிங்களம்
மனைப் பொருளியல்
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும்
சித்திரம்
சங்கீதம்
(a) சிங்களம்
(b) கர்நாடகம்
(c) மேலைத்தேய
நாட்டியம்
(a) நடனம்
(b) பரதநாட்டியம்

நாடகமும் அரங்கியலும்
(a) சிங்களம்
(b) தமிழ்
(c) ஆங்கிலம்
தமிழ்
ஆங்கிலம்
பாளி
சமஸ்கிருதம்
லத்தீன்
பிரயோக கணிதம்
கிரேக்கம்
அரபு
ரூஷ்யா
பிரெஞ்சு
ஜேர்மன்
ஹிந்தி
சீனு
பௌத்த நாகரிகம்
இந்து நாகரிகம்
இஸ்லாமிய நாகரிகம்
கிரேக்க/ரோம நாகரிகம்
மலாயா
பேர்சியன்
உருது
ஜப்பான்
பௌத்தம்
கிறீஸ்தவம் (Rc/Non Rc)
இந்துசமயம்
இஸ்லாம்

பகுதி I

பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணி (B. A.) பட்டப் பாட நெறிக்கான விரிவுரைகளுக்குப் பதிவு செய்வதற்கான தகைமைகள்

★ மாணவர் ஒருவர் கலைமாணி விரிவுரைக்குத் தன்னைப் பதிவு செய்வதற்குப் பின்வரும் கல்வித் தகைமைகளில் ஒன்றை அல்லது தொழிற் தகைமைகளில் ஒன்றை நிச்சயமாகப் பெற்றிருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை :

(1) இலங்கைப் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட 3 பாடங்களில் க. பொ. த. உயர் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். அல்லது

(2) ஒரு பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது

(3) பல்கலைக் கழகத்தின் உள்வாரி மாணவராகத் தெரிவு செய்யப்பட்டோ, அல்லது

(4) பல்கலைக் கழகத்தின் முதற்தேர்வில் சித்தியடைந்தோ இருத்தல் வேண்டும்.

தொழிற் தகைமைகள் :

(1) கல்விப் பகுதியின் ஆசிரிய பயிற்சிச் சான்றிதழ், அல்லது

(2) தொழில் நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்கள், அல்லது

(3) முன்னைய பல்கலைக் கழகக் கல்லூரிகளால் வழங்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்கள், அல்லது

(4) விவசாய டிப்ளோமா பட்டங்கள், அல்லது

(5) பொறியியல் டிப்ளோமா பட்டங்கள், அல்லது

(6) சமூக சேவை டிப்ளோமா பட்டங்கள்

பாடங்கள் :

கலைமாணி முதற் தேர்விற்குப் பின்வரும் பாடங்களில் 3 பாடங்களுக்கான விரிவுரைகளுக்கு மாணவர் ஒருவர் தோற்ற வேண்டும்.

(1) பிரயோக கணிதம்	(2) ஆங்கிலம்	(3) தமிழ்
(4) பொருளியல்	(5) புவியியல்	(6) மெய்யியல்
(7) அரசியல் விஞ்ஞானம்	(8) இந்துநாகரிகம்	(9) தூயகணிதம்

பகுதி II

விஞ்ஞானமாணி (B. Sc.) (புள்ளி விபரவியல்) பட்டப் பாட நெறிக்கான விரிவுரைகளுக்குப் பதிவுசெய்வதற்கான தகைமைகள்

★ மாணவர் ஒருவர் விஞ்ஞானமாணி (புள்ளி விபரவியல்) விரிவுரைகளுக்குத் தன்னைப் பதிவுசெய்வதற்குப் பின்வரும் கல்வித் தகைமைகளில் ஒன்றை அல்லது தொழிற் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள் :

1. க. பொ. த. உயர் பரீட்சையில் ஒரே அமர்வில் தூயகணிதம் பிரயோக கணிதம் உட்பட கீழுள்ள அட்டவணையிலுள்ள பாடங்களில் ஒன்றுமாக மொத்தமாக 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(1) பௌதிகவியல்	(5) புவியியல்	(9) கணக்கியல்
(2) இரசாயனவியல்	(6) விவசாயம்	(10) வர்த்தகமும்நிதியும்
(3) தாவரவியல்	(7) பொருளியல்	(11) அளவையியல்
(4) விலங்கியல்	(8) அரசியல்	

தொழிற் தகைமைகள் :

(1) கல்விப் பகுதியால் வழங்கப்பட்ட கணித சிறப்புப் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ், அல்லது

(2) தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களைக்கொண்ட பட்டதாரிச் சான்றிதழ், அல்லது

(3) தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா, அல்லது

(4) தொழிற் தொடர்புகள் சான்றிதழ், அல்லது

(5) வித்தியாலங்கார வளாகத்தால் வழங்கப்பட்ட கணித டிப்ளோமா சான்றிதழ் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பாடங்கள் :

(1) தூயகணிதம் (2) பிரயோக கணிதம்
(3) புள்ளிவிபரவியல்

விஞ்ஞானமாணி (புள்ளி விபரவியல்) முதற் தேர்வுக்குத் தோற்ற விரும்பும் மாணவர் ஒருவர் மேற் குறிப்பிட்ட 3 பாட விரிவுரைகளுக்கும் தோற்றவேண்டும்.

பகுதி III

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வர்த்தகமாணி (B. Com.) பட்டப் பாட நெறிக்கான விரிவுரைகளுக்குப் பதிவுசெய்வதற்கான தகைமைகள்

★ மாணவர் ஒருவர் வர்த்தகமாணி விரிவுரைகளுக்குத் தன்னைப் பதிவுசெய்வதற்குப் பின்வரும் கல்வித் தகைமைகளில் ஒன்றை அல்லது தொழிற் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள் :

(1) க. பொ. த. உயர் பரீட்சையில் வர்த்தகமும் நிதியும் அல்லது கணக்கியல் ஆகிய இரண்டு பாடங்களில் ஒன்று உட்பட ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

தொழிற் தகைமைகள் :

(1) கல்விப் பகுதியின் வர்த்தக சிறப்புப் பயிற்சி ஆசிரியர் சான்றிதழ், அல்லது

(2) தொழில் நுட்பக் கல்லூரியின் வர்த்தக டிப்ளோமா பட்டத்திற்கான 1ஆம், 2ஆம் வருட பரீட்சையில் சித்தி, அல்லது

(3) தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் டிப்ளோமா 1ஆம், 2ஆம் வருட பரீட்சைகளில் சித்தி, அல்லது

(4) பட்டயக் கணக்கறிஞர் பரீட்சையின் இடைத் தேர்வில் (Intermediate) சித்தி, அல்லது

(5) வியாபாரப் படிப்புகள் கல்வியியல் டிப்ளோமா, அல்லது

(6) மதிப்பிடுதல் (Valuation) டிப்ளோமா, அல்லது

(7) தொழில் நுட்பக் கல்லூரியின் வியாபாரப் படிப்புகளில் (National Certificate in Bussiness Studies) தேசிய சான்றிதழ் ஆகியவற்றில் ஒன்றை உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பாடங்கள் :

வர்த்தகமாணி முதற் தேர்வுக்குப் பின்வரும் 6 பாடங்களுக்கான விரிவுரைகளுக்கும் மாணவர் ஒருவர் நிச்சயமாகத் தோற்றவேண்டும்.

(1) வர்த்தக கைத்தொழில் அமைப்புகள்
(2) பொருளியல் I
(3) பொருளியல் II
(4) கணித அடிப்படை
(5) கணக்கியல் I
(6) ஆங்கிலம்

தபால் கல்விச்சேவை :

வெளி மாவட்ட மாணவர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளை ஏற்று விரிவுரைகளைத் தபால்மூலம் வழங்குவதென முடிவுசெய்துள்ளோம். இச்சேவையினை வசதியற்ற யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களும் மேற்கொள்ளலாம். இப் பயிற்சிநெறிக்கு மாணவர்கள் கட்டணமாகப் பட்டப் பாட நெறிக்கேற்றவகையில் கட்டணங்களை மாதம் மாதம் அனுப்பி விரிவுரைக் குறிப்புகளைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நூலக வசதி :

பல்கலைக் கழகத்தில் விரிவுரைகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்குத் தேவையான நூல்களை அவர்கள் இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. ஆனால் வெளிநிலை மாணவர்கள் விரிவுரைக் குறிப்புக்களை மட்டுமே நம்பியிருக்கவேண்டியுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு ஓரளவிற்குப் பயன்தரக்கூடிய வகையில் எமது நூல் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மாணவர்களுக்கு வசதியளிக்கப்பட்டுள்ளது.

கட்டணங்கள் :

கலை முதற்தேர்வு G. A. Q. 125/-

கலைமாணி B. A. 175/-

விஞ்ஞான முதற்தேர்வு G. S. Q. 125/-

விஞ்ஞானமாணி B. Sc. 200/-

வணிக முதற் தேர்வு First in Commerce 150/-

வணிகமாணி B. Com. 200/-

முக்கிய குறிப்புகள் :

★ இலங்கைப் பல்கலைக்கழக வெளிநிலைப் பாட நெறிகளுக்கான விரிவுரைகள் யாவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் சனி, ஞாயிறு நாட்களில் மட்டும் நடாத்தப்படும்.

★ இலங்கையிலும், பிறநாடுகளிலுமுள்ள பலதுறைகளிலும் தேர்ச்சி பெற்ற அறிஞர்கள் காலத்துக்குக் காலம் விசேட விடுமுறை நாட்களில் கருத்தரங்குகளை நடாத்துவர்.

★ பல்கலைக் கழக வெளிநிலைப் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்படும் ஒரு மாணவர், பல்கலைக்கழகத்தின் உள்நிலை மாணவராகத் தெரிவு செய்யப்பட்டால் அவர் விரும்பின் வெளிநிலைப் பாடநெறியைக் கைவிட்டு உள்நிலை மாணவராகச் சேர்ந்துகொள்ளலாம்.

★ பட்டப்படிப்புகள் கல்லூரி யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பல்கலைக் கழக வெளிநிலை மாணவர்களுக்குத் தமிழ் மொழிமூலம் விரிவுரை வழங்கும்.

★ இக் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களிலேயே மாணவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் பதிவுக் கட்டணமான ரூபா இருநூற்றுஐம்பதுடன் அனுப்பப்படல்வேண்டும்.

★ பதிவுக் கட்டணத்துடன் அனுப்பப்படாத பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

★ ஒவ்வொரு மாதமும் மாதாந்தக் கட்டணங்கள் முற்பணமாக முதல் மாதம் இறுதியில் செலுத்தப்படல் வேண்டும்.

சுகவீனம்போன்ற முக்கிய காரணங்களுக்கு மாணவர்களுக்கு லீவு வழங்கப்படும். இந்த லீவு நாட்களுக்கு மாணவர்கள் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

★ இக் கல்லூரியின் மாணவராகச் சேர்ந்தபின் நடக்கும் ஒரு நிகழ்ச்சியால் மாணவர் ஒருவர் தனது கல்வியைத் தொடரமுடியாது பொருளாதார ரீதியாகத் தாக்கப்பட்டு இருந்தால், அம் மாணவரின் கல்வியை முடிப்பதற்கான செலவுகள் முழுவதையும் இக் கல்லூரியே பொறுப்பேற்கும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரம் நீள கடித உறையினுள் வைக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

★ இக் கல்லூரிக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களை இலங்கைப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலை மாணவராகப் பதிவு செய்வதற்கான முழு ஒழுங்குகளையும் பட்டப் படிப்புகள் கல்லூரியே மேற்கொள்ளும்.

PRINTED AT
THIRUMAKAL PRESS,
CHUNNAKAM